திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்

முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org

### ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

### ஆசிரியர் குழு (அயலகம்)

திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg

## செய்தி ஆசிரியர்

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



## தொடர்புக்கு

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## முகவரி

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020




# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கவிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள்



**வி.ஜெயபிரியா**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை(ம)தமிழாய்வுத்துறை,
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி,
வாணியம்பாடி.
**மின்னஞ்சல்** : jayapriyamkjc@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்களைச் சூழலியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள்**

Ecology, Oikos, Logos, அன்றில், தாழை மலர், யாமம்.

**சூழலியல் விளக்கம்**

Logos - கற்றல் என்னும் கிரேக்கச் சொற்களிலிருந்து தோன்றியது 'Ecology' என்ற சொல் முதன்முதலாக 'ஏர்னஸ்ட் ஹாகடெகல்' என்பவரால் 1869இல் கையாளப்பட்டது. இதற்கு உயிர்களுக்கும் அவைத் தொடர்பான கல்வி சூழலியல் எனப்படுவது உயிரினங்களுக்கும் அவை வாழும் பகுதிக்கும் இடையிலான உறவுநிலை தொடர்பான கல்வி என விளக்கம் கூறலாம். 'சூழலமைப்பு' என்பது சூழலியலில் குறிப்பிடத்தக்கதொரு கூறுபாடாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் பல்வேறுபட்ட உயிரனத் தொகுதிகள் தங்களுக்குள்ளும் தாம் வாழும் சூழலுடனும் கொண்டுள்ள தொடர்பை விளக்குவது சூழலமைப்பு எனலாம்.

**1963இல் Engone Odum**

“இயற்கையின் அமைப்பையும், தொழிற்பாட்டையும் பற்றிய கற்கை” என வரைவிலக்கணப்படுத்தினார். பின்னர் இந்தச் சூழலியல் ஒரு வகையில் தற்சூழலியல், ஒன்றியச் சூழலியல் என இருவகையாக அணுகப்படும். பின்னர், குடித்தொகை,

சாக்கியம், சூழற்றொகுதி உயிற்கோளம் எனப் பல்வேறு மட்டங்களில் உயிருள்ள, உயிரற்ற கூறுகள் ஆராயப்படும்.

'Oikos', 'Logos' என்னும் கிரேக்கச் சொற்களிலிருந்து தோன்றியது 'Ecology' என்னும் சூழலியல் எனப்படுவது உயிரினங்களை அவற்றின் வாழ்விடங்களில் கற்றல் எனலாம். அதாவது, சுற்றுச் சுழலில் உள்ள உயிரற்ற, உயிருள்ள கூறுகளைக் கற்கும் கற்கையாகும்.

### சூழலமைப்பு

| | | |
|---|---|---|
| இயற்கைச் சூழலமைப்பு | 1.நிலம் சார்ந்தவை<br>2.நீர்சார்ந்தவை | 1.நிலம்சார்ந்தவை<br>1.காடு<br>2.புல்வெளி<br>3.பாலை |
| 2.நீர்சார்ந்தவை<br>1.நன்னிர்<br>2.உவர்நீர் | நன்னிர்<br>1.ஓடுநீர்<br>2.ஓடாநீர் | உவர்நீர்<br>1.கடல்நீர்<br>2.கழிநீர் |

அன்றைய சமுதாயத்தின் வாழ்வியல் பிரதிபலிப்பு என்பது புலவர்கள் தங்கள் படைப்புகளில் தான் ஒரு சமூகத்தின் பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கை, இறைவழிப்பாடு, சமுகம், உணவுமுறைகள், இயற்கையோடு அவர்கள் கொண்ட பற்றினை எடுத்து இயம்புகின்றது. அவ்வகையில் தமிழிலக்கிய உலகில் சங்ககாலப் புலவர்கள் தங்கள் பாடலில் சூழலியலுடன் அகம் (ம) புறம் சார்ந்த பாடல்களை எழுதியுள்ளனர். ஒரு சிறந்த சூழலியல் திறனாய்வினைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழில் தோன்றியுள்ளதை நமக்குப் பறைசாற்றுகின்றன. சூழலியல் திறனாய்வைச் சங்க இலக்கியத்தில் பொருந்தப் பார்த்தால் பழந்தமிழரிடம் காணப்படும் பல்லுயிரின வேறுபாடும். இன்றைய காலக்கட்டத்தில் மக்கள்தொகைப் பெருக்கம், அதன் காரணமாக உருவான நகர்மயமாக்கம் போன்றவை இயற்கையும் சுற்றுச்சூழலையும் அதிக அளவில் பாதித்துள்ளதை அனைவரும் அறிவர். ஆற்றுமணல் மலைகளைக் குவாரிகளாக மாற்றி, விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றியும் ஏரிகளையும், குளங்களையும் அடுக்குமாடி குடியிருப்புகளாகவும், வணிகவளாகமாகவும் மாற்றி விலங்குகளை இறைச்சிக்காகவும் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்ற இக்காலகட்டத்தில்

சுற்றுச்சூழலோடு ஒன்றி வாழாத வாழ்வை வாழ்ந்து வருகின்றோம் என்பது வருத்தம் அளிக்கின்றது.

**நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடலில் சூழலியல் சிந்தனைகள்**

**வெள்ளிவீதியார்**

கடைச்சங்கம் சார்ந்த பெண்பாற் புலவர்களுள் ஒருவர் வெள்ளிவீதியார். இவர் தம் கணவனைக் காணாது தேடினார் என்பதை அகநானூற்றில்,

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்த் திசினால் யானே"[1] (அகநானூறு - 147)

அகநானூறு ஔவையார் பாடல் மூலம் அறியலாம். இதனால் ஔவையாருக்கு முந்தையவர் என்று அறியமுடிகின்றது. வெள்ளிவீதியார் பாடல்கள் திணைவிவரம் சார்ந்து நான்கு பாடல்களும், குறிஞ்சி சார்ந்து இரண்டு பாடல்களும், மருதம் நெய்தல் சார்ந்து ஒவ்வொரு பாடலுமாக இடம் பெற்றுள்ளன. இவர் எக்காரணத்தாலோ தம் கணவனை விட்டுப்பிரிந்து தனித்து வாழ்ந்திருந்தார் என்பது அவர் பாடல்கள் வழி அறியப்படுகின்றன. இவ்வாய்வு கட்டுரை நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்களில் சூழலியல் சிந்தனைகள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இலக்கியம் எவ்வாறு இயற்கையை ஓர் அழகியல் பண்டமாகப் புனைந்து வந்துள்ளது? எவ்வாறு பெண்ணியம், பாலின அணுகுமுறை மூலம் இந்த உலகத்தைப் புரிய முயலுகிறதோ அதுபோல இத்திறனாய்வு பூமியின் இயற்கைச் சூழலின் நிலைப்பாட்டிலிருந்து இலக்கியத்தையும் பண்பாட்டையும் புரிந்து கொள்ள முயலுகிறது என்பார் செ.வை.சண்முகம். 'சங்க இலக்கியத்தில் சுற்றுச்சூழல்' என்னும் தலைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளிவீதியாரின் நற்றிணையில் 335 - நெய்தல் திணை பாடல் வேட்கை மிகுதியால் தோன்றும் உணர்ச்சியைத்,

"திங்களும் திகழ்வான் ஏர்தரும் இமிழ்நீர்ப்
பொங்கு திரை புணரியும் பாடு ஓவாதே
யாமம் உய்யாமை நின்றன்று
காமம் பெரிதே களைஞரோ இலரே"[2]

என்ற பாடலில் திங்களும் திகழும் வானத்தில் தோன்றுகின்றது. கடலும் பொங்கும் அலையோடு ஒலிக்கிறது. கடல்நீரும் தாழையும் நிரம்பிய நீரையும் பல பூவையுமுடைய கானலில் முள்ளுடைய இலையைக் கொண்டது. சோறு எடுத்துச் சொறியும் அகப்பை

போலக் கூம்பிய அரும்பு மலர்ந்து நறுமணத்தைக் காற்றில் வீசுகிறது. காற்று, அம்மணத்தோடு கரிய பெரிய பனையில் மோதுகிறது.

அன்றில், அப்பனை மரத்தில் உள்ளது. என் பக்கத்து வந்து உரக்கக் கத்துகிறது. என் காமம், இவை யாவற்றாலும் பெரிதாகிறது. அக்காமத்தைப் போக்கும் தலைவர் அருகில் இல்லை என இயற்கை வனப்பு யாவும் தலைவனைப் பிரிந்து வாழ்பவர்களுக்குத் துன்பத்தை மட்டமே தரும். அங்ஙனமே இப்பாட்டிலும் நிலவு, கடல், தாழைமலர், அன்றில், யாழிசை அனைத்தையும் சூழலியல் நோக்கில் உள்ளதாகவே உள்ளது.

"நிலவே நீல் நிற விசும்பில் பல் கதிர் பரப்பி
பால் மலி கடலின் பரந்து பட்டன்றே
ஊரே ஒலி வரும் சும்மையொடு மலிபுதொகுபு ஈண்டி
கலி கெழு மறுகின், விழவு அயரும்மே
கானே பூ மலர் கஞலிய பொழில் அகம்தோறும்
அதனால், என்னோடு பொரும் கொல் இவ் உலகம்?
உலகமொடு பொருள் கொல், என் அவலம் உறுநெஞ்சே?"[3]

நிலவு, நில நிற வானத்தில் வெண்ணிறமான பல கதிர்களையும் பரப்பில் பால் நிறைந்த கடல் போலப் பரந்துபட்டது. ஊர், ஒலிக்கூட்டத்தோடு மக்கள் நிறையச் சேர்ந்து திரண்டு ஆரவாரமான தெருக்களில் திருவிழா கொண்டாடும் அழகிய மலர்கள் நிரம்பிய பொழில்கள் தோறும் வண்டுகள் தாம் விரும்பிய துணை வண்டுகளோடு ஊதும். புனைந்த அணிகலன் நெருகிழுமாறு செய்த தனிமைத் துயரத்தோடு மிக நீண்ட இராப் பொழுது முழுவதும் கண் உறங்காமல் இருக்கின்றேன். அதனால் இவ்வுலகம் என்னைத் தாக்கிப் போர் புரியுமோ? (அ) உலகத் தோடு என் துயருற்ற நெஞ்சம் போர் செய்யுமோ? அறியேன். இப்பாடலில் ஆகாயம், கடல், காடு, சோலை, வண்டு அனைத்தும் இயற்கை சார்ந்தது.

நற்றிணையில் பாடல் எண் 70,

"சிறு வெள்ளாங்குருகே! சிறுவெள்ளாங்குருகே!
துறை போகு அறுவைத் தூமடி அன்ன
நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே?
எம் ஊர் வந்து, எம் உண்துறைத் துழைஇ,
சினைக் கெளிற்று ஆர்கையை அவர் ஊர் பெயர்தி
அனைய அன்பினையோ, பெரு மறவியையோ
ஆங்கண் தீம் புனல் ஈங்கண் பரக்கும்

கழனி நல் ஊர் மகிழ்நர்க்கு என்

இழை நெகில் பருவரல் செப்பாதோயே!"[4]

சிறிய வெளிய நாரையே! சிறிய வெளிய நாரையே நீர்த்துறையிலே வெளுத்த வெள்ளாடையின் மாசற்ற மடி போன்ற வெள்ளை நிறமான சிறகுகளையுடைய சிறிய வெளிய நாரையே, நீ எம் ஊரில் வந்து எமது நீர் உண்ணும் துறைகளில் துழாவிக் கெளிற்று மீன்களை உண்ணுகிறாய். பிறகு அவர் ஊருக்குத் திரும்பிப் போகிறாய். அங்கேயுள்ள இனிய நீர் இங்கே பரவிக் கிடக்கும். வயல்களையுடைய நல்ல ஊரியினை என் அன்பருக்கு நீ எனது அணிகள் கழன்ற நோயைச் செப்பாமல் இருக்கிறாய் நீ அவ்வாறாய அன்புடைய பறவையா? (அ) பெரிய மறதியுடைய பறவையோ எனத் தலைவனைப் பிரிந்த தலைவி தன் பிரிவுத்துன்பத்தைப் பறவைகளின் வழி விளக்குகின்றாள்.

## முடிவுரை

சங்கக் காலச் சமூகம் இயற்கை வருணனை வாழ்வியல் உணர்வு, உரையாடல், உளவியல் உணர்வு, உவமைகள், இன்பம் மற்றும் துன்ப உணர்வுகள் அனைத்தும் மேகம், மழை, காடு, மலர், இலை, விலங்குகள், பறவைகள், ஆறு, மலை, மரங்கள் என அனைத்தும் இயற்கையொடு ஒன்றியதாகவே உள்ளன. அவ்வகையில் வெள்ளிவீதியார் பாடல்கள் அனைத்தும் அவ்வகையில் உள்ளன என்பதை அறிய முடிகின்றது.

## மதிப்பீடு

வெள்ளிவீதியார் அகப்பாடல்கள் அனைத்தும் அந்தந்த நிலத்திற்குரிய முதற், கரு, உரிப்பொருளைச் சுட்டி நிற்கின்றன. தாம் வாழ்ந்த இயற்கைச் சூழலைப் படைப்பில் அடையாளப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கப் பாடல்களைப் பாடிய ஆண் படைப்பாளிகளைவிடப் பெண் படைப்பாளிகளின் பாடல்கள் இயற்கை சார்ந்த பதிவுகள் அதிகளவில் இடம் பெற்றிருப்பதாக உணர்கிறேன்.

இயற்கையை ஒரு தனித்த உயிரியக்கமாகக் கருதிப் பெண்படைப்பாளர்கள் தமது பாடல்களில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்பு**

1. அகநானூறு மூலமும் உரையும், பாடல் - 147, பக் - 449.
2. நற்றிணை மூலமும் உரையும், பாடல் - 335, பக் - 619.
3. நற்றிணை மூலமும் உரையும், பாடல் - 348, பக் - 645.
4. நற்றிணை மூலமும் உரையும், பாடல் - 70, பக் - 125.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712